අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/02/01/11/021 මගේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2023.10.10

வலயக் கல்வி அலுவலகம் வவுனியா வடக்கு
15 DEC 2023
Received
Zonal Education Office
Vavuniya North

சுற்றுநிருப இலக்கம் - 35/ 2023

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்
பரீட்சை ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்துக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகள், ஆசிரியர் கலாசாலைகளின் அதிபர்கள்
அனைத்து அதிபர்கள்
அனைத்து பிரிவேனாதிபதிகள்
அனைத்து உதவி பெறும் மற்றும் விசேட பாடசாலை அதிபர்கள்
அனைத்து அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் பிரதானிகள்

## கல்வி நிறுவன வளாகங்களை புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள், மதுபானம் மற்றும் ஏனைய அனைத்து போதைப் பொருட்களினதும், பாவனை, மேம்பாடு, விற்பனை போன்றன இல்லாத வலயங்களாக்குவதை உறுதிப்படுத்தி பேணுவதை நோக்காகக் கொண்டு "பாடசாலை நட்புக் கழகங்களை"தாபித்தல்

மேற்படி விடயம் தொடர்பாக இதற்கு முன்னராக வெளியிடப்பட்ட கல்விச் செயலாளரின் இல. *ED/01/21/01/5/1* மற்றும் *2020.07.29* திகதியுடைய மற்றும் இல. *20/2020* உடைய பாடசாலை வளாகங்களை புகையிலை, மதுபானம் மற்றும் ஏனைய போதைப் பொருட்களின் பாவணையற்ற வலயங்களாக்குவதற்கான சுற்றுநிருபத்தையும் தாண்டி இதன் பின்னர் இந்தச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகள் அமுலில் இருக்கும்.

***02.*** அதன் படி கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களிலும் மதுபானம், போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திப் பொருட்கள், புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள் மற்றும் இனிப்பு பாக்கு சார் உற்பத்திப் பொருட்கள், அபாயகர மருந்துப் பொருட்கள், மிகை மாத்திரை அளவு கொண்ட மருந்துப் பொருட்கள், தடை செய்யப்பட்ட உற்சாகமூட்டிகள், பாதகமான உணவுச் சேர்க்கைகள், தனி நபர் சுகாதாரத்திற்கு பாதகமான செயற்கை வலுவூட்டும் பான வகைகள் மற்றும் போதையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஏதேனுமொரு பொருளின் பாவணை, விற்பனை, மேம்பாடு மற்றும் அவற்றுடன் தொடர்பான நிறுவனங்களிடமிருந்து அனுசரனைகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் யாவும் இதனூடாக முழுமையாக தடை செய்யப்படுகின்றது. மேலும், சட்டபூர்வமான மற்றும் சட்டபூர்வமற்ற புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள், மதுபானங்கள் மற்றும் ஏனைய போதைப் பொருட்கள் மற்றும் போதையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் வேறு ஏதேனுமொரு பொருட்கள் இதில் உள்ளடங்குகின்றன.

***03.*** பாடசாலை மாணவர்கள் அல்லது பாடசாலை சமூகத்தை இலக்காகக் கொண்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனைகளை தடுப்பதற்காக கல்வி நிறுவனங்களின் பிரதானிகள், அதிபர்கள் மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் தேவையான வழிகாட்டல்கள் இந்தச் சுற்றுநிருபத்தினூடாக வழங்கப்படுகின்றது.

***04.*** சுற்றுநிருபம் செல்லுபடியாகும் நிறுவனங்கள், நபர்கள் மற்றும் குழுக்கள்

***4.1.*** கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மாகாணக் கல்வித் திணைக்களங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள், அரச பாடசாலைகள், (ஆசிரியர் விடுதிகள், மாணவர் விடுதிகள், பாடசாலை சிற்றுண்டிச் சாலைகள் உட்படலாக), தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையம் உட்படலாக ஆசிரியர் மத்திய நிலையங்கள், உதவி பெறும் மற்றும் விசேட பாடசாலைகள், பிரிவெனாக்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் ஆகிய கல்வி அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகள் மீதும் செல்லுபடியாகும்.

***4.2*** நிறுவனங்களின் வளாகங்களினுள் இருக்கும் சந்தர்ப்பங்களிலும், நிறுவனத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருக்கும் சந்தர்ப்பங்களிலும் சகல நிறுவனத் தலைவர்கள் உட்படலாக கல்வி சார் மற்றும் கல்வி சாரா பணிக்குழுவினர், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை கல்வி சாரா பணிக் குழுவினர்,

ஆசிரியர் பயிலுனர்கள், அனைத்து மாணவர்கள், பயிலுனர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், கட்டுமான ஒப்பந்தக்காரர்கள், தொழிலாளர்கள் மற்றும் எந்தவொருவர் மீதும் இது செல்லுபடியாகும்.

*05.* சுற்றுநிருபம் செல்லுபடியாகும் சந்தர்ப்பங்கள்

நிறுவன வளாகத்தினுள், நிறுவனத்தின் அடையாளத்துடன் பாடம் சார் செயற்பாடுகள் அல்லது அதற்கு புறம்பான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், வெளி நபர்கள் அல்லது நிறுவனங்களை, நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக தொடர்புபடுத்திக் கொள்ளும் போது, நிறுவனத்தின் சொத்துக்களைப் பயன்படுத்தும் போது மற்றும் அவ்வாறு பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கும் போது மதுபானம், போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திப் பொருட்கள், புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள் மற்றும் இனிப்புப் பாக்கு சார் உற்பத்திப் பொருட்கள், அபாயகரமான மருந்துப் பொருட்கள், மிகை மாத்திரை அளவுடைய மருந்துப் பொருட்கள், தடைசெய்யப்பட்ட உற்சாகமூட்டிகள், பாதகமான உணவுச் சேர்க்கைகள், தனி நபர் ஒருவரின் சுகாதாரத்திற்கு பாதகமான செயற்கை வலுவூட்டும் பானங்கள் மற்றும் போதையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஏதேனுமொரு பொருட்களின் விற்பனை, மேம்பாடு, பாவனை ஆகியன நேரடியாக தடை செய்யப்படுகின்றன. உரிய வளாகத்தினுள் அல்லது குறித்த செயற்பாடுகளை இலக்காகக் கொண்ட எந்தவொரு செயற்பாட்டினை மேற்கொள்ளும் போதும் இதற்கான வாய்ப்பு வழங்கப்படலாகாது.

உ+ம்: - பாடசாலைகளுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில்
கல்வி மற்றும் வினோத சுற்றுப் பயணங்களின் போது
இணைப் பாடவிதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில்
பாடசாலை வளாகத்தில் பழைய மாணவர்கள் உட்படலாக வெளித் தரப்பினரால் ஒழுங்குசெய்யப்படும் ஏதேனுமொரு போட்டி நிகழ்ச்சி, விளையாட்டுக்கள், களியாட்டங்கள், கண்காட்சிகள் போன்ற அனைத்து செயற்பாடுகளின் போதும்,

*06.* மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நியமங்களை பின்பற்றல் தொடர்பாக அனைத்து மாணவர்கள்/ பயிலுனர்கள்/ உத்தியோகத்தர்கள்/ பெற்றோருக்கும் விழிப்புணர்வூட்டுவது அதிபர்/ நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும் என்பதுடன், பாடசாலைக்கு/ கல்வி நிறுவனத்திற்கு வெளியில் இருந்து வருகை தரும் நபர்களும் இந்த நிபந்தனைகளை பின்பற்றுதல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் குறித்த பாடசாலை/ கல்வி நிறுவகம் ஒழுக்காற்று சட்டங்களை மீறியவர்களாக கருத்தப்படல் வேண்டும்.

*07.* இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகள் மீறப்படும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு வகையிலான செயற்பாடு அல்லது செயற்பாடுகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக முழுமையான அறிக்கை ஒன்றை/ பொலிஸ் முறைப்பாட்டின் பிரதியை சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கல்விச் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இது தொடர்பிலான இறுதிப் பொறுப்பு கல்விச் செயலாளரையே சாரும். இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக இச் சுற்றுநிருப ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் எடுக்கபடல் வேண்டும் என்பதுடன் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக உரிய தரப்பினரை அறியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதும் நிறுவனங்களின் தலைவர்களது பொறுப்பாகும்.

*08.* போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
"நட்புக் கழகங்கள்" கீழே தரப்பட்டுள்ளவாறு நான்கு மட்டங்களை உடையது.
1. பாடசாலை மட்ட, "பாடசாலை நட்புக் கழகங்கள்"
2. கல்வி வலய மட்ட "வலய நட்புக் கழகங்கள்"
3. மாகாணக் கல்வித் திணைக்கள மட்ட "மாகாண நட்புக் கழகங்கள்"
4. கல்வி அமைச்சு மட்ட "தேசிய நட்புக் கழகம்"

*8.1.* பாடசாலை/ கல்வி நிறுவனங்களின் வளாகங்களை மதுபானம், போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திப் பொருட்கள், புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள் மற்றும் இனிப்புப் பாக்கு சார் உற்பத்திப் பொருட்கள், அபாயகரமான மருந்துப் பொருட்கள், மிகை மாத்திரை அளவுடைய மருந்துப் பொருட்கள், தடைசெய்யப்பட்ட உற்சாகமூட்டிகள், பாதகமான உணவுச் சேர்க்கைகள், தனி நபர் ஒருவரின் சுகாதாரத்திற்கு பாதகமான செயற்கை வலுவூட்டும் பானங்கள் மற்றும் போதையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஏதேனுமொரு பொருட்களின் பாவனையை ஊக்குவிக்காத வலயமொன்றாக்குதல் மற்றும் அவற்றிற்கு அடிமை ஆகாதிருப்பதற்கான திறன்களை விருத்தி செய்யக்கூடிய பௌதீக சூழல் ஒன்றை உறுதிப்படுத்துதல், புரிதலுடனான தீர்மானமெடுக்கும் திறனை விருத்தி செய்தல் மற்றும் தமக்கும், சூழலுக்கும் பாதகமானவற்றை நிராகரிப்பதற்கான திறமைக்கான வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்தல், சமூகத்தினரை அறியப்படுத்துவதனூடாக அவர்களது தொழிற்பாட்டுடனான பங்களிப்பினை இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெற்றுக்கொள்வதையும் நோக்காகக் கொண்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*8.2.* வரும் காலங்களில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் போது கல்வி அமைச்சினால் எழுத்து மூலமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்களூடாக மாத்திரம் குறித்த

நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான பின்னனி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட போதைப் பொருள் தடுப்பு தொடர்பான கல்வி அமைச்சின் இச் சுற்றுநிருபத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் கையேட்டின் படி மாத்திரமே செயற்படல் வேண்டும்.

**8.3.** சகல பாடசாலைகளும்/ நிறுவனங்களும். அதிபர்/ நிறுவனத் தலைவரின் வழிகாட்டலுடனும், அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடனும் கூடியதாக கீழே *(8.3.1)* பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "பாடசாலை நட்புக் கழகம்" எனும் பெயரில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான குழு ஒன்று தாபிக்கப்படல் வேண்டும். அத்துடன் இணைந்ததாக கல்வி வலயங்கள், மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் கல்வி அமைச்சு மட்டத்திலும் "நட்புக் கழகங்கள்" தாபிக்கப்படல் வேண்டும்.

**8.3.1** "பாடசாலை/ நிறுவன நட்புக் கழகம்" போதைப் பொருள் தடுப்புக் குழுவின் கட்டமைப்பு

- பிரதம போஷகர் – பாடசாலை அதிபர்
- போஷகர்கள் – பிரதி அதிபர் ஒருவர் மற்றும் சுகாதாரம் மற்றும் உடற் கல்விப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் அல்லது ஆலோசனை மற்றும் வழிகாட்டல் விடயத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் (இவற்றிற்கு பொறுப்பாசிரியர்கள் இல்லை எனின் பொருத்தமான வேறு ஏதேனுமொரு பாடப் பொறுப்பாசிரியர் ஒருவரை இணைத்துக் கொள்ள முடியும்)
- தலைவர்
- உப தலைவர்
- செயலாளர்
- உப செயலாளர்
- பொருளாளர்
- மாணவர் குழு அங்கத்தவர்கள் *(15)*
- பெற்றோர் அங்கத்தவர்கள் *(2)*

விசேடமாக குறிப்பிடப்பட்டாத ஏனைய பதவிகளுக்கும் மாணவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய மாணவர் தலைவர்கள், விளையாட்டு மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய சிறந்த ஆளுமையுடன் கூடிய மாணவர்களை நியமித்துக் கொள்வது மிகவும் பொருத்தமானது.

இக் குழுவினை நடாத்திச் செல்லும் போது மாணவர்களை கவருவதற்காக பொருத்தமான, மாணவர்களால் தீர்மானிக்கப்படும் பெயர் ஒன்றை அதிபர் பயன்படுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.
*(உ+ம்: "…………………………………………* வித்தியாலயத்தின்/ நிறுவனத்தின், நட்புக் கழகம்")

**8.3.2** "வலய நட்புக் கழகம்" வலய போதைப் பொருள் தடுப்புக் குழுவின் கட்டமைப்பு

- பிரதம போஷகர் - வலயக் கல்விப் பணிப்பாளர்
- தலைவர்
- உப தலைவர்
- செயலாளர்
- உப செயலாளர்
- பொருளாளர்
- அங்கத்தவர்கள்

(தலைவர் முதல் அங்கத்தவர்கள் வரை:) பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்/ வலயத்திலுள்ள அதிபர்கள்/ பாடப் பணிப்பாளர்கள்/ வலயத்திற்குட்பட்ட பொலிஸ் நிலைய பிரதிநிதி ஒருவர்/ வலயத்திற்குட்பட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர்

**8.3.3** "மாகாண நட்புக் கழகம்" மாகாண போதைப் பொருள் தடுப்புக் குழுவின் கட்டமைப்பு

- பிரதம போஷகர் - மாகாணக் கல்விச் செயலாளர்
- போஷகர் - மாகாணக் கல்விப் பணிப்பாளர்
- தலைவர்
- உப தலைவர்
- செயலாளர்
- உப செயலாளர்
- பொருளாளர்

(தலைவர் முதல் பொருளாளர் வரை:) மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி/ மாகாண விடயப் பணிப்பாளர்/ உதவி. பிரதி விடயப் பணிப்பாளர்கள்/ அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்/ பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புச் செயலக அங்கத்தவர் ஒருவர்/ மாகாணத்திற்குட்பட்ட பிரதான வைத்தியசாலையின் பிரதிநிதி ஒருவர்/ அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதி ஒருவர்/ ஒவ்வொரு வலயத்திலிருந்தும் ஒரு அதிபர் வீதம்/ மாகாண சமூக உளவியல் வள நிலையத்தின் உதவி முகாமையாளர்

*8.3.4* "தேசிய நட்புக் கழகம்" தேசிய போதைப் பொருள் தடுப்பு நெறிப்படுத்துகைக் குழுவின் கட்டமைப்பு

- பிரதம போஷகர் - கல்விச் செயலாளர்
- போஷகர் - மேலதிக செயலாளர் (பாடசாலை செயற்பாடுகள்)
- தலைவர் - கல்விப் பணிப்பாளர் (இணைப் பாடவிதானம், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை)
- உப தலைவர் - பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் (இணைப் பாடவிதானம்)
- செயலாளர் - பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர்
- உப செயலாளர் - விடயக் கோவைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்
- பொருளாளர் - கல்வி அமைச்சின் உதவி/ பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர்
- நிறைவேற்றுக் குழு - 09 மாகாணப் பிரதிநிதிகள், உரிய நிறுவனங்களின் அங்கத்தவர்கள், 09 அதிபர்கள் வீதம்/ சமூக உளவியல் வள நிலைய உதவிப் பணிப்பாளர்

**09.** மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, அறிக்கைப்படுத்தல், பயிற்சிச் செயற்பாடுகள், கொள்கை மற்றும் திட்டங்களை வகுத்தல்.

**09.01.** மாகாண மற்றும் வலய குழுக்களூடாக பாடசாலை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மாத்திரமல்லாது அறிக்கைப்படுத்தும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் அவ் அவ் ஆலோசனை, சிகிச்சை அல்லது சீர்திருத்த நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், இச் சுற்றுநிருபத்தை மீறி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பும், பாடசாலை (அல்லது நிறுவனங்கள்) நட்புக் கழகத்தில் போசகரகளாக உள்ள ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிகளை வழங்குவதும் வலய மற்றும் மாகாண நட்புக் கழகங்களின் பொறுப்பாகும்.

**09.02.** தேசிய மட்டத்தில், உரிய தகவல் முறைமையை பேணுதல், மேற்பார்வை, கண்காணிப்பு, மதிப்பீடு, பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல், தேசிய மட்டத்திலான கொள்கைகள், திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் தேசிய போதைப் பொருள் தடுப்பு நெறிப்படுத்துகைக் குழுவான "தேசிய நட்புக் கழகத்தை" வருடாந்தம் நடாத்திச் செல்வது கல்வி அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் நெறிப்படுத்துகை மையத்தின் பொறுப்பாகும்.

**10.** ஒட்டுமொத்த பாடசாலை மாணவர்களதும் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கும் சமூகத்தை இந்த பிரச்சனையிலிருந்து மீட்பதற்குமான தேசிய ரீதியிலான அவசியத்தை முன்னிறுத்தி இந்தச் சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முறையாக நடைமுறைப்படுத்தி பாடசாலையில்/ கல்வி நிறுவனத்தில் அனைத்து உறுப்பினர்களதும் சுகாதார பாதுகாப்பு மாத்திரமல்லாது, நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பதானது தங்களது பொறுப்பு மற்றும் கடமையுமாகும் என்பதை வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கின்றேன். அதன் படி இச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படுவது மாகாண, வலய கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும் என்பதுடன் இதனை வெற்றிகரமாக்குவதற்காக சகல விதமான செயற்பாடுகளையும் நேர்த்தியாக மேற்கொள்ளுமாறும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.என் ரணசிங்ஹ**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**

<u>பிரதிகள்</u>

1. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி அலுவலகம் - தகவலுக்காக
2. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக
3. செயலாளர், சுகாதாரம் மற்றும் சுதேசிய மருத்துவச் சேவைகள் அமைச்சு - தகவலுக்காக
4. கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயக திணைக்களம் - தகவலுக்காக
5. சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம் - தகவலுக்காக
6. தலைவர், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை – தகவலுக்காக
7. தலைவர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை - தகவலுக்காக
8. பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), கல்வி அமைச்சு - தகவலுக்காக
9. கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலைகள் கிளை - தகவலுக்காக

## அதிபர்களுக்கானது

| | குறிக்கோள் | பணி | செயற்பாடு | செயன்முறை |
|---|---|---|---|---|
| 01 | போதைப் பொருட்களை அடையாளம் காணல் மற்றும் போதைப் பொருள் நிவாரணம் தொடர்பான அறிவை வழங்குதல். | • கல்வி அமைச்சு மற்றும் போதைப் பொருள் ஒழுப்பு தொடர்பான தேசிய நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய போதைப் பொருள் நிவாரணம் தொடர்பாக விஞ்ஞான ரீதியான அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல். | • போதைப் பொருள் ஒழுப்பு தொடர்பாக செயற்படும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.<br>• போதைப் பொருட்கள் மற்றும் போதைப் பொருட்கள் அல்லாதவைகள் தொடர்பான புரிதலைப் பெற்றுக்கொள்ளல்.<br>• போதைப் பொருட்கள் தொடர்பான அறிவு மற்றும் நடைமுறையில் உள்ள தேசிய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பாக புரிதலை வழங்குதல். | • வதிவிட மற்றும் வதிவிடமல்லாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>• செயலமர்வுகள்<br>• கலந்துரையாடல்<br>• காணொளிகள்<br>• இணையப் பாவணை |
| 02 | பாதுகாப்பான பாடசாலை சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புதல். | • ஆசிரியர், மாணவர் பெற்றோருக்கான விழிப்புணர் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.<br>• போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக செயற்படும் நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்பி | • போதைப் பொருட்கள் தொடர்பாக சமூகத்தை அறியப்படுத்த நடவடிக்கையெடுத்தல்.<br>• போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக செயற்படும் சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.<br>• நேர்மறையான | • பாடசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள்<br>• கருத்தரங்குகள்<br>• விரிவுரைகள்<br>• சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள்<br>• ஆசிரியர் கூட்டங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | னைக் கட்டியெழுப்புதல்<br>• போதைப் பொருட்களற்ற பாதுகாப்பான பாடசாலை சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக உபாய வழிமுறைகளை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துதல்.<br>• போதைப் பொருள் ஒழிப்புக்கு பொருத்தமான வகையில் வகுப்பறை முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்காக ஆசிரியர்களை நெறிப்படுத்தல்.<br>• போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக செயற்படும் நிறுவனங்கள் தொடர்பான பெயர் பட்டியல் ஒன்றை தயாரிக்கும் பொறுப்பினைக் கையளித்தல். | ஆசிரியர் தொடர்பினைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான பாடசாலை சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புதல்<br>• போதைப் பொருள் தொடர்பான கருப்பொருள்களை புரிந்து கொள்வதற்கு பொருத்தமான வகையில் வகுப்பறையை முகாமை செய்தல்.<br>• போதைப் பொருட்கள் தொடர்பாக செயற்படும் நிறுவனங்களின் பட்டியல் ஒன்றை தயாரித்தல். | |
| 03 | போதைப் பொருட்களின் பாவனையின் காரணத்தினால் ஏற்படக்கூடிய பாதகங்கள் தொடர்பாக அறியப்படுத்தல். | • ஆரோக்கியமான மாணவர் சந்ததியினரை உருவாக்குவதற்குப் பொருத்தமான பாடசாலை கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புதல். | | |

ஆசிரியர்களுக்கானது

| தொடர் இலக்கம் | குறிக்கோள் | செயற்பாடு | ஆசிரியர் பணி | செயன்முறை |
|---|---|---|---|---|
| 01 | போதைப் பொருட்களை அடையாளம் காணல். | • போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக செயற்படும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.<br>• இவ்வாறாக பெற்றுக்கொள்ளும் அறிவைக் கொண்டு பொருத்தமான செயன்முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களை அறியப்படுத்தல்.<br>• கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்யும் நிறுவனங்கள் தொடர்பாக அதிரை அறியப்படுத்தல். | தரம் 1 மற்றும் 2 இற்கானது<br>• போதைப் பொருட்கள் தொடர்பாக உலகளாவிய, சமகால போக்குகள் மற்றும் எமது நாட்டில் பரவல் தொடர்பாக ஆராய்வர்<br>• போதைப் பொருட்கள் மற்றும் போதைப் பொருட்கள் அல்லாதவை தொடர்பாக ஆராய்வர் | • போதைப் பொருள் ஒழிப்பு சார் நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு<br>• கலந்துரையாடல்<br>• உரையாடல்<br>• விவாதம்<br>• செயலமர்வுகள்<br>• கருத்தரங்குகள்<br>• நாடகங்கள்<br>• சுவரொட்டிகள் / சித்திரப் போட்டிகள் |
| 02 | பாதுகாப்பான பாடசாலை சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புதல். | • போதைப் பொருட்கள் கிடைக்கப்பெறும் வழிகளை தடை செய்வதற்காக பொருத்தமான முறைகளை மும்மொழிந்து நடைமுறைப்படுத்தல். | • பாடசாலையினுள் போதைப் பொருட்கள் வரும் வழிகளை ஆராய்தல்.<br>• விசேட இலக்குக் குழுக்கள் தொடர்பாக தேடிப்பார்த்தல்.<br>• போதைப் | • போதைப் பொருள் ஒழிப்புக் குழு, மாணவர் தலைவர் குழு, ஆசிரியர்கள், கல்விசாரா பணியாளர்களை அறியப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • இனங்காணப்பட்ட பிள்ளைகளுக்கான சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.<br>• அதிபரது அனுமதியுடன் உத்தேச நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுப்ப நடவடிக்கையெடுத்தல்.<br>• உரிய நிறுவனங்களின் ஆலோசனைகளின் படி நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை வகுத்தல். | பொருள் பாவணைக்கு அடிமையாகியுள்ள பிள்ளைகளை இனங்காணல். | தயாரித்தல்.<br>• பாடசாலைக்கு வெளியே போதைப் பொருள் நிவாரண செயற்பாடுகளுக்காக பொலிசார் மற்றும் ஏனைய நிறுவனங்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல்.<br>• பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களது உதவியினைப் பெற்றுக்கொள்ளல்.<br>• பாடசாலையின் சுகாதாரம் மற்றும் உடற் கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர் படையணி/ சாரணர் ஆசிரியர்களது ஒத்துழைப்பினைப் பெற்று பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல். |
| 03 | போதைப் பொருட்களின் பாவணையின் காரணத்தினால் ஏற்படும் பின் விளைவுகளை இனங்காணல். | • போதைப் பொருள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் மற்றும் ஏனைய ஆசிரியர்களுடன் | • போதைப் பொருள் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக செயற்படும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்தல்.<br>• பிரதேசத்தின் சுகாதார பிரிவுகளுடன் | • கருத்தரங்குகள்<br>• காணொளிகள்<br>• குறுந் திரைப்படங்கள்<br>• செயலமர்வுகள்<br>• விரிவுரைகள்<br>• துண்டுப் பிரசுரங்கள்<br>• போதைப் பொருள் ஒழிப்பு சார் நிறுவனங்களால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒன்றிணைந்து செயற்படல்.<br>• போதைப் பொருள் நிவாரணம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஆசிரியர்களை ஈடுபடுத்தல்.<br>• பாடசாலையில் போதைப் பொருட்களை பயன்படுத்தும் மாணவர்கள் இருப்பதாக அவதானித்திருப்பின் பாடசாலையினை போதைப் பொருட்களற்ற இடமொன்றாக மாற்றுவதற்காக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு உதவுதல்.<br>• போதைப் பொருள் ஒழுப்பு தொடர்பான செயலுபாயங்களை இனங்காண்பதனூடாக தேவையான சந்தர்ப்பங்களில் நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கையெடுத்தல். | வெளியிடப்பட்ட வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளல். |
| 04 | பாடசாலையில் போதைப் பொருள் ஒழிப்புக் குழுக்களை நிறுவுதல். | • நிறுவப்படும் குழுவின் பணிகளை தெளிவுபடுத்தல்/ அறிமுகப்படுத்தல், அதற்குப் பொருத்தமான பெயர் ஒன்றை மும்மொழிதல். | • 2020 சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் போதைப் பொருள் ஒழிப்புக்கான பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் (ஆலோசனைக் கையேட்டிற்கமைய) | • உரிய குழுவினர் மாதம் ஒரு முறை ஆசிரியர்கள்/ மாணவர்கள்/ அதிபருடன் கூட்டங்களை நடாத்தி பிரச்சனைகளுக்கான மும்மொழிவுகள், பரிகாரங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | போன்றனவற்றை இனங்காணல். |
| 05 | போதைப் பொருள் நிவாரணம் தொடர்பாக பாடசாலை கலாசாரம் ஒன்றை உருவாக்குதல். | • மகிழ்ச்சியாக இருப்பதற்காக பிள்ளைகளிடையே உடலியல், உளவியல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வதற்கு வழிகாட்டுதல். | • பாடசாலையினை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கவர்ச்சிகரமான இடமாக்குதல்.<br>• பாடசாலை ஆலோசனை சேவைகளுக்கு உதவுதல்.<br>• உபாய ரீதியிலான செயன்முறைகளை பின்பற்றுவதனூடாக மாணவர்களிடையே போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான பாடசாலை கலாசாரம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் மனப்பாங்குகளைக் கட்டியெழுப்புதல். | • சம வயதுக் குழுக்களூடாக கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல்.<br>• பிள்ளைகளை இயன்றளவில் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.<br>• பாடசாலையினுள் சுவரொட்டிகள் ஊடாக போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான கூற்றுக்களைக் காட்சிப்படுத்தல்.<br>• போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான கண்காட்சிகளை நடாத்துதல்.<br>• காணொளிகள்/ குறும் படங்களூடாக அறியப்படுத்தல். |
| 06 | பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | • இந்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வதற்காக உதவுதல் மற்றும் அதனூடாக வழங்கப்படும் அறிவை பகிர்ந்தளித்தல். | • பாடசாலை ஆசிரியர்களுக்கு போதைப் பொருள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களி ஒழுங்குசெய்தல்.<br>• அந் நிகழ்ச்சித்திட்டங்களூடாக பெற்றுக்கொண்ட அறிவினை பெற்றோர், பழைய மாணவர் மற்றும் சமூகக் குழுக்களுக்கு வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை | • பயிற்சி அமர்வுகள், கலந்துரையாடல் முகாம்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒழுங்குசெய்தல்.<br>• நிறுவப்பட்ட குழுவினூடாக நடைமுறைப்படுத்தப் படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவுதல். | |
| 07 | போதைப் பொருள் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு | • போதைப் பொருள் நிவாரணத்திற்காக பரிந்துரைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள மும்மொழிவுகளை பாடசாலைகளினுள் நடைமுறைப்படுத்தல் | • போதைப் பொருள் பாவணை தொடர்பாக பரிந்துரைக்கப்பட்டுள்ள மும்மொழிவுகள் பற்றி அறிந்துகொள்ளல். | • வகுப்பு வட்டங்கள், விரிவுரைகளில் மாணவர் தலைவர்களைப் பங்குகொள்ளச் செய்தல், மேற்பார்வை அறிக்கைகளை பேணுதல். |

பாடசாலை மாணவர்களுக்கானது

| அபிவிருத்திப் பருவம்/ தரம் | குறிக்கோள் | பணி | செயற்பாடு | செயன்முறை |
|---|---|---|---|---|
| தரம் 1-2 | பிள்ளைகளிடையே போதைப் பொருட்களின் பாவனை தொடர்பாக காணப்படும் நேர்மறையான மனப்பாங்குகளை எதிர்மறையாக்குதல். | போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குரிய வசதிகளை வழங்குதல். | • பொருத்தமான கதைகளை தெரிவுசெய்தல்.<br>• மாணவர்களுக்கு சரியான புரிதல் ஏற்படக்கூடிய வகையில் முன்வைத்தல்.<br>• மாணவர்களுடன் சிறு கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடல்.<br>• போதைப் பொருட்கள் சார்ந்த நேர்மறையான சிந்தனைகளை இல்லாதொழிக்கக்கூடிய வகையில் கலந்துரையாடலை நெறிப்படுத்தல். | கதை கூறல், சித்திரங்களை வரைதல் நடனம் மற்றும் பாத்திர நடிப்பு, சிறுவர் பாடல்கள் |
| | | | பொருத்தமான தலைப்புக்களின் கீழ் சித்திரங்களை வரைவதற்கு வாய்ப்பளித்தல். | சித்திரம் வரைதல். |
| தரம் 3-5 | மாணவர்களிடையே காணப்படும் போதைப் பொருட்களின் பாவனை தொடர்பான நேர்மறையான மனப்பாங்குகளை எதிர்மறையாக்கல். | போதைப் பொருள் நிவாரணம் தொடர்பாக ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள்ள வழிகாட்டுதல். | பொருத்தமான தலைப்புக்களின் கீழ் சித்திரச் சுவரொட்டிகளை ஆக்குதல் மற்றும் கட்டுரைகளை எழுத சந்தர்ப்பமளித்தல். | சித்திரங்கள், சுவரொட்டிகளை ஆக்கம் செய்தல் மற்றும் கட்டுரைகள் மற்றும் பாத்திர நடிப்புக்கள் |
| தரம் 6-8 | பாடசாலை வளாகத்தினை போதைப் | | மாணவர்களிடையே தொடர்பாடல் திறன்களை விருத்தி | பாடசாலையை ஆரம்பிக்க முன்னர் போதைப் பொருள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருட்களின் பாவணையை ஊக்குவிக்காத வலயமொன்றாக்கு தல். | | செய்வதனூடாக நேர்மறையான சிந்தனைகளை உருவாக்குவதற்கு ஊக்குவித்தல். | ஒழிப்பு தொடர்பான செய்திகளை முன்வைத்தல் (நேர்மறையான சிந்தனைகள்) |
| | மாணவர்களிடையே புரிதலுடன் கூடிய தீர்மானம் மேற்கொள்ளும் திறன்களை விருத்தி செய்தல், தமக்கு/ சமூகத்திற்கு பாதகமானவற்றை நிராகரிப்பதற்கான திறன்களை விருத்தி செய்தல். | இத் திறன்களை விருத்தி செய்வதற்கான செயலுபாய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்தல் . | தீர்மானமெடுக்கும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், பிரச்சனைகளை தீர்க்கும் திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல். | போதைப் பொருள் நிவாரணம் தொடர்பாக மாணவர்களுக்கு செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் முகாம்களை நடாத்துதல். |
| தரம் 9-11 | பாடசாலை வளாகத்தினை போதைப் பொருட்களின் பாவணையை ஊக்குவிக்காத வலயமொன்றாக்கு தல். | தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்கான உபாய வழிமுறைகளை மேம்படுத்தல் | மாணவர்களிடையே தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதனூடாக நேர்மறையான சிந்தனைகளை உருவாக்குவதற்கு ஊக்கப்படுத்தல். | பாடசாலை ஆரம்பிக்க முன்னர் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான செய்திகளை முன்வைத்தல். (நேர்மறையான சிந்தனைகள்) |
| | மாணவர்களிடையே புரிதலுடன் கூடிய தீர்மானம் மேற்கொள்ளும் திறன்களை விருத்தி செய்தல், தமக்கு/ சமூகத்திற்கு பாதகமானவற்றை நிராகரிப்பதற்கான திறன்களை விருத்தி செய்தல். | சுவர் செய்திப் பத்திரிகைகளை தயாரிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். | • போதைப் பொருட்கள், மதுபானம் மற்றும் புகையிலை போன்றனவற்றை விளம்பரப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாக கட்டுரைகளை ஆக்கம் செய்து அவற்றை சுவர் செய்திப் பத்திரிகையினூடாக காட்சிப்படுத்தல்.<br>• ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளப்ப | சுவர் செய்திப் பத்திரிகைகளை தயாரித்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | டும் முயற்சிகளை வெளிக்காட்டக்கூடிய வகையில் எழுதுவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தல்.<br>• ஆசிரியர்களது மேற்பார்வையின் கீழ் இச் செயற்பாடுகளை மேற்கொள்வது முக்கியமாகும். | |
| | | இந் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான வளவாளர்களை இனங்கண்டு சேவைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுத்தல். | இதற்குப் பொருத்தமான வளவாளர்களை தெரிவு செய்யும் பணியினை அதிபரது மேற்பார்வையுடன் ஆசிரியரது தலையீட்டுடன் மேற்கொள்ள வேண்டும். | பாடசாலையில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக பயிற்சி மற்றும் நிபுணத்துவ அறிவுடன் கூடிய வளவாளர்களை தொடர்புபடுத்தி மாணவர்களுக்காக விரிவுரைகளை நடாத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒழுங்குசெய்தல். |
| | | போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான நாடகங்களுக்கான திரைக் கதைகளை எழுதுவதற்காக விடயம் சார் நிபுணர்களது உதவிகளைப் பெற்றுக்கொள்ள. | போதைப் பொருட்களை பயன்படுத்தும் கதாபாத்திரங்கள் ஈர்க்கக்கூடியதாக இல்லாமல், போதைப் பொருட்களை பயன்படுத்தாத கதாபாத்திரங்களை பிரபல்யப்படுத்துவதற்கும் பின்பற்றுவதற்கும் எண்ணங்களை தோற்றுவிக்கக் கூடிய வகையில் நாடகங்களுக்கான திரைக் கதைகளை எழுதும் போதும் | போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான சரியான விடயங்களை வெளிக்காட்டக்கூடிய வகையிலான நாடகங்கள், வீதி நாடகங்கள், நடிப்புக்களை பாடசாலை வளாகத்திற்கு வெளியே அரங்கேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை ஒழுங்குசெய்து நடைமுறைப்படுத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கதாபாத்திரங்களுக்காக மாணவர்களை தெரிவுசெய்யும் போதும் கருத்தில் கொண்டு செயற்படல் வேண்டும். | தல். |
| | மாணவர்களிடையே புரிதலுடன் கூடிய தீர்மானம் மேற்கொள்ளும் திறன்களை விருத்தி செய்தல், தமக்கு/ சமூகத்திற்கு பாதகமானவற்றை நிராகரிப்பதற்கான திறன்களை விருத்தி செய்தல். | இத் திறன்களை விருத்தி செய்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துதல். | தீர்மானமெடுக்கும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், பிரச்சனைகளை தீர்க்கும் திறன்கள் போன்றனவற்றை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல். | போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக மாணவர்களுக்கு செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் முகாம்களை நடைமுறைப்படுத்துதல். |
| | | பாடசாலை நூலகத்திற்கு புத்தகங்கள் மற்றும் ஒலி உபகரணங்களை வழங்குதல் | பாடசாலை நூலகங்களூடாக மாணவர்களுக்கு அவசியமான அறிவினை வழங்க வழிகாட்டுதல். | பாடசாலை நூலகத்தின் ஒரு பகுதியில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான பொருத்தமான புத்தகங்கள், செய்திப் பத்திரிகைகள், படிவங்களை பேணி வரல். |
| | | . போதைப் பொருட்களை ஒழித்தல் தொடர்பான உதவிக் குழுக்களை தெரிவுசெய்து ஒப்படைகளை தயாரித்தல். | ஒத்துழைப்புடன் செயற்படக்கூடிய, ஏனையோருக்கு உதவ விரும்பும் சுறுசுறுப்பான மாணவர் குழு ஒன்றை தெரிவு செய்து அவர்களை போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான அறியப்படுத்துதல். | பாடசாலையில் போதைப் பொருள் ஒழிப்புக்காக சிறு குழுக்களை உருவாக்கி அவர்களூடாக சகல மாணவர்களுக்கும் அது தொடர்பான அறிவினை வழங்குவதற்காக சிறு குழுக்களை உருவாக்கி வலுவூட்டுதல். |

| அபிவிருத்திப் பருவம்/ தரம் | குறிக்கோள் | ஆசிரியரின் பணி | செயற்பாடு | செயன்முறை |
|---|---|---|---|---|
| தரம் 12-13 | பாடசாலை வளாகமானது போதைப் பொருட்களின் பாவணையை ஊக்கப்படுத்தாத வலயமொன்றாக்குதல். | மாணவர்களிடையே தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதனூடாக நேர்மறையான சிந்தனைகளை ஏற்படுத்த ஊக்குவித்தல். | • மாணவர்களுக்கு போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு வழங்குவதற்காக ஒளி, ஒலி மற்றும் அச்சு ஊடகங்களூடாக ஆதாரங்களை வழங்கி வாய்ப்பளித்தல்.<br>• மாணவர்களுக்கு போதைப் பொருட்களின் பாவணை தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.<br>• பாடசாலை வளாகத்தினை இதற்குப் பொருத்தமான வகையில் மீளுருவாக்கம் செய்தல்.<br>• மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் | • பாடசாலை ஆரம்பிக்க முன்னர் போதைப் பொருள் நிவாரணம் சார் செய்திகளை முன்வைத்தல் (நேர்மறையான சிந்தனைகள்)<br>• விரிவுரைகளை நடாத்துதல்.<br>• ஆக்கபூர்வமான நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>• நாடகம், வீதி நாடகம் மற்றும் பாத்திர நடிப்பு |
| | மாணவர்களிடையே புரிதலுடன் கூடிய தீர்மானமெடுக்கும் திறமையை விருத்தி செய்தல் மற்றும் தமக்கும் சமூகத்திற்கும் பாதகமான விடயங்களை நிராகரிப்பதற்கான திறமையை விருத்தி | தாங்கிக் கொள்ளும் திறன்கள், தீர்மானமெடுக்கும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கான திறன்களை | • ஆளுமை விருத்தி மற்றும் சமூக உளவியல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• தலைமைத்துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>• நூலகம் மற்றும் | • களப் பயணங்கள் மற்றும் கள ஆய்வுகள்<br>• இலக்கும் மற்றும் கலை இரசனை<br>• இயன்றளவில் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்தல். | விருத்தி செய்தல். | இணையத்தை முறையாக பயன்படுத்த ஊக்குவித்தல். | ஈடுபடுத்தல். |

## பெற்றோர்களுக்கானது

| தொடர் இல | குறிக்கோள் | பணி | செயற்பாடு | செயன்முறை |
|---|---|---|---|---|
| 01 | குடும்பத்தினுள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான மனப்பாங்கு/ திறன்களைக் கட்டியெழுப்புதல். | • குடும்பத்தினுள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் அவசியமான காரணிகளை இனங்காணல்.<br>• பிள்ளைகளுடன் நெருக்கமான உறவினைக் கட்டியெழுப்புதல்.<br>• குடும்பத்தினுள் முன்மாதிரியான வகையில் பெற்றோரின் நடத்தைகளை பேணுதல். | • அமைதியான குடும்பச் சூழல் ஒன்றைக் கட்டியெழுப்ப நடவடிக்கையெடுத்தல்<br>• இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.<br>• குடும்பத்தினுள் மகிழ்ச்சிகரமாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல். | • கலந்துரையாடல்<br>• சுற்றுலாக்கள்<br>• காணொளிக் காட்சிகள்/ செய்திப் பத்திரிகைகள்/ சஞ்சிகைகள்/ கட்டுரைகள் மூலம் உதாரணங்களை வழங்குதல். |
| 02 | பிள்ளை தொடர்பாக பெற்றோர்களின் புரிதலை அர்த்தமுள்ள வகையில் ஏற்படுத்துதல். | • பிள்ளைகள் எனப்படுபவர்கள் வித்தியாசமானவர்கள் என்பதை எப்போதும் புரிந்துகொள்ளல்.<br>• பிள்ளைகளது எண்ணங்கள், விருப்பங்கள், நடத்தைகள் தொடர்பாக புரிதலை ஏற்படுத்திக்கொள்ளல்.<br>• பிள்ளை பழகக்கூடிய குழுவினர் | • பிள்ளையின் திறன்களை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்குதல்.<br>• பிள்ளை வெற்றி மற்றும் தோல்விக்கு முகங்கொடுப்பதற்கு உதவுதல்.<br>• குடும்பத்தினுள் பிள்ளைக்கான அங்கீகாரத்தை ஏற்படுத்துதல்.<br>• பிள்ளைகளது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக தேடி அறிந்துகொள்ளல்.<br>• பிள்ளையின் போசனை மற்றும் சுகாதார நிலைமை குறித்து அவதானம் செலுத்துதல்.<br>• பிள்ளை செல்லக்கூடிய மேலதிக வகுப்புக்கள், வைபவங்கள், பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல். | தனிப்பட்ட விருப்புக்கள் தொடர்பாக அவதானத்துடன் இருத்தல்.<br>• பிள்ளைகள் பழகுவதற்குப் பொருத்தமான குழுக்களுடன் அவர்களை இணைத்தல்.<br>• எப்போதும் பிள்ளைகளது போசனை மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்பாக உரிய வேளைகளில் கண்டறிந்து தேவையான பரிகாரங்களை வழங்குதல். | |
| 03 | முன்மாதிரியான பெற்றோர்களை உருவாக்குதல். | • பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கும் வகையில் பெற்றோர்களைக் கட்டியெழுப்புதல்<br>• பிள்ளைகளது எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு பொருத்தமான செயலுபாயங்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.<br>• விளைதிறன் மிக்க வகையில் குடும்பத்தை முகாமை செய்து அதன் பெறுமதியினை<br>• பிள்ளைகள் உணர்ந்துகொள்ள இடமளித்தல். | • தாய் மற்றும் தந்தை, குடும்ப ஒற்றுமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஒருவருக்கொருவர் நெருக்கமாக செயற்படல்.<br>• பிள்ளைகளின் திறன்களை இனங்கண்டு அவர்களுக்கு மிகவும் இலகுவாக அடைந்துகொள்ளக் கூடிய இலக்குகளை நோக்கிச் செல்லல்.<br>• பிள்ளைகளின் அன்றாட செயற்பாடுகளை தனியாக செய்யப் பழக்குதல்.<br>• பிள்ளையின் | • அழகியல் சார் நிகழ்ச்சித்திட்டங்கள்<br>• சுற்றுச் சூழல் சார் செயற்பாடுகள்<br>• சிறந்த பொழுது போக்குகள் மற்றும் பழக்க வழக்கங்கள்<br>• குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து மேற்கொள்ளப் படும் செயற்பாடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தன்னம்பிக்கையை மேம்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல். | |
| 04 | பிள்ளைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதற்கான வாய்ப்புக்களை இல்லாதொழித்தல். | • பிள்ளைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதற்கான காரணங்களை அடிமையாதல்.<br>• போதைப் பொருட்களின் காரணத்தினால் உடலியல் மற்றும் உளச் சுகாதாரம் பாதிக்கப்படும் பிள்ளைகளது எதிர்காலத்தின் மீது அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து புரிதலை வழங்குதல். | • பிள்ளைகளை பாடசாலைகளில் இடம்பெறும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் ஈடுபடச் செய்வதற்கு அனுமதி வழங்குதல்.<br>• பிள்ளைகளது மன அழுத்தத்தை குறைத்துக் கொள்வதற்காக பல்வேறு கவர்ச்சிகரமான பொழுது போக்குகளின் ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்குதல். | |
| | | • போதைப் பொருட்கள் பரவலடைவதன் காரணத்தினால் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மாணவர்கள் உணரக்கூடிய வகையில் வலியுறுத்திக் கூறல். | • போதைப் பொருட்களின் பாவணை காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக உதாரணங்களைப் பெற்று அவற்றின் பாதகங்கள் குறித்து மாணவர்களுக்கு தெளிவுபடுத்தல்.<br>• சம வயதுக் குழுவினருடன் பழகும் போது பிள்ளைகள் தெரிவுசெய்ய வேண்டிய சம வயதுக் குழுவினரின் நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தல். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | • போதைப் பொருட்களின் பாவனை காரணமாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள பயங்கரமான பின் விளைவுகள் தொடர்பாக பிள்ளைகளிடையே புரிதலை ஏற்படுத்த நடவடிக்கையெடுத்தல். | |
| 05 | பிள்ளைக்கு வழங்கப்பட்டுள்ள கல்வி சார் மன அழுத்தத்தை குறைப்பதனூடாக இலகு மன நிலையுடன் கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல். | • கல்வி சார் செயற்பாடுகளை இலகு செயன்முறைகளூடாக மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br>• . ஓய்வு நேரங்களில் பிள்ளைகள் பாடல்களைப் பாடவும், இசைக்கவும் ஆக்கங்களை மேற்கொள்ளவும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br>• குடும்ப அங்கத்தவர்களுடன் ஒன்றாக இணைந்து மேற்கொள்ளக்கூடிய புதிய பொழுது போக்குகளின் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பமளித்தல்.<br>• பிள்ளையின் பாடசாலை செயற்பாடுகள் தொடர்பாக எப்போதும் மேற்பார்வை செய்தல். | • எளிய கால அட்டவணை ஒன்றிற்கமைவாக கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியளித்தல்.<br>• கலைத் திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு வசதியளித்தல்.<br>• இணையத்தை பயன்படுத்தி குடும்ப அங்கத்தவர்களுடன் ஒன்றாக இணைந்து மேற்கொள்ளக்கூடிய பொழுது போக்குகளை இனங்கண்டு அவற்றை குடும்பத்தினுள் மேற்கொள்ள சந்தர்ப்பமளித்தல்.<br>• பாடசாலை ஆசிரியர்களுடன் ஒருங்கிணைப்புடன் செயற்பட்டு கல்விசார் முன்னேற்றங்களுக்கு உதவியளித்தல். | |